

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (4.6.2023) சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர் மத்திய இரயில் நிலையத்தில், சிறப்பு இரயில் மூலம் சென்னைக்கு வந்த ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு தேவையான மருத்துவ முதல் உதவி அளித்து, தேவைப்படுகிறவர்களுக்கு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். உடன் வருவாய் நிர்வாக ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் நடவடிக்கை!

# ஒடிசாவிலிருந்து சிறப்பு இரயில் மூலம் 137 பயணிகள் சென்னை வருகை!

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - மா.சுப்பிரமணியன் வரவேற்றனர்!

சென்னை, ஜூன் 5-

ஒடிசா மாநிலம், பாலசோரில் ஏற்பட்ட பெரும் இரயில் விபத்தில் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளுக்குத் தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளைச் செய்திடவும், உயிரிழந்தவர்களைக் கண்டறிந்து அவர்கள் குடும்பத்தினருக்கு உதவிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், மீட்புக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, ஆகியோர் விபத்து நடந்த பாலசோர் என்ற இடத்தில் நடந்து வரும் மீட்புப் பணிகளைக் கவனித்து வருகின்றனர். மற்றொரு குழுவான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக், ஆகியோர் ஒடிசாவில் இதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில், இரயில் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் விபரங்களை சேகரித்தும், மீட்புப் பணிகளுக்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியும் வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஒடிசாவிலிருந்து சிறப்பு இரயில் மூலம் 137 பயணிகள் சென்னை வருகை தந்தனர். இவர்களை இரயில் நிலையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வருவாய் நிர்வாக ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஆகியோர் வரவேற்றனர். நேற்று காலை வருகை தந்த பயணிகளுக்கு காலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

இவர்களில் 36 பயணிகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 34 பயணிகள் இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அனுப்பி வைக்கப்பட்ட இவர்களில் 3 பயணிகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற பயணிகள் சிறு சிகிச்சைக்குப் பிறகு அவர்களது இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், ஒடிசா மாநிலத்திலிருந்து சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு வந்தடைகின்ற பயணிகளுக்கு தேவையான பரிசோதனை மற்றும் மேல் சிகிச்சை மேற்கொள்ள 30 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிக்கென அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் 7 பேருந்துகளும், காவல் துறை மூலம் 50 டாக்ஸிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. கூடுதலாக 10 அவசர கால ஊர்தியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இரயில் நிலையத்தில் வீல் சேர், ஸ்டிரெச்சர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வருவாய்த் துறை, சுகாதாரத் துறை அலுவலர்கள், வருகின்ற பயணிகளுக்குத் தேவையான உதவிகள் செய்திட பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

### செஞ்சி நான்கு முனை சந்திப்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

விழுப்புரம், ஜூன் 5-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு செஞ்சி நான்கு முனை சந்திப்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து ஒடிசா ரயில் விபத்தில்இறந்தவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் கழகத்தினர் அமைதி ஊர்வலம் நடத்தி அஞ்சலி செலுத்தினர்.

ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற ரயில் விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டவர்கள் பரிதாபமாக பலியாகினர்.

ரயில் விபத்தில் இறந்தவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்செஞ்சியில் அமைதி ஊர்வலமும் மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி நான்கு முனை சந்திப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மௌன ஊர்வலம் நடத்தி ஒரு நிமிடம்மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியர் அலிமஸ்தான், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன்,நகர செயலாளர் கார்த்திக், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் ஒன்றியக் கழகம் சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் ஒன்றிய செயலாளலாரும் ஒன்றியபெருந்தலைவருமான புலிவலம் ஏ.தேவா தலைமையில் கழகக் கொடி ஏற்றப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும், உணவும் வழங்கப்பட்டது.

### தலைவர் கலைஞரின் நூற்றாண்டுத் தொடங்கும் இந்நாளில் -

# தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து - நமது இயக்க இலக்குகளை அடைய உறுதியேற்போம்!

### சமூக வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை,ஜூன் 5-

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுத்தொடங்கும்இந்நாளில், கலைஞர் புகழைப் போற்றி, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து, நம் இயக்க இலக்குகளை அடைய உறுதியோடு அவர் வழி நடப்போம்!" என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூளுரைத்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100ஆவது பிறந்த நாளை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:



**ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட தமிழ்ச்சமூகம் சனாதனப் பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து உறுதியாய் எழுந்து நின்றது.**

**இந்த மண்ணுக்கான மக்களுக்கான திராவிட இயக்கம் தோன்றியது.**

**புத்தர் முதல் வள்ளலார் வரை இந்த மண்ணில் விதைத்த புரட்சியின் அடித்தளத்தில் திராவிட இயக்கம் வேரூன்றியது.**

**அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், பண்டித அயோத்திதாசர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன், பிட்டி தியாகராயர், நடேசனார், டி.எம்.நாயர் ஏ.பி.பாத்ரோ, எம்.சி.இராஜா, பனகல் அரசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா எனத் தமிழினத்தின் இனமான பகுத்தறிவு சுய மரியாதை உணர்வைக் காத்திட உருவான தலைவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து தலைமை தாங்கியவர் நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞர் அவர்கள்!**

**எண்ணற்ற சமூகநலத் திட்டங்களால் இன்றைய நவீனத் தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி அவர்!**

**தமிழ்நாட்டின் அடையாளமாக விளங்கும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடங்கும் இந்நாளில், அவரது புகழைப் போற்றி, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து, நம் இயக்க இலக்குகளை அடைய உறுதியோடு அவர் வழி நடப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்புடன் கொண்டாடுவோம்!

### தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 5-

தலைமை தி.மு.க. தீர்மானக் குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், நேற்று காலை, சென்னை - அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழகத் தீர்மானக் குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையிலும் தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைத்திலிங்கம், கீரை எம்.எஸ்.விஸ்வநாதன், அக்ரி கே.பி.டி.கணேசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் க.வேங்கடபதி மு.முத்துச்சாமி, பி.நாச்சிமுத்து, வ.சத்தியமூர்த்தி, எம்.ஜெயக்குமார் ஆர்.சேதுநாதன், ஆதி.சங்கர், ரெஜினால்ட், வெற்றிச்செல்வன், ப.சரவணன், செஞ்சிசிவா, மு.இரா.செல்வராஜ், எம். வீரகோபால், என்.வி.காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கழக தீர்மானக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழக உயர்நிலை செயல் திட்ட குழு அறிவித்த முடிவுக்கு இணங்க கீழ்கண்ட தீர்மானம் அனைவரின் ஒப்புதலோடு நிறைவேற்றப் படுகிறது."தமிழே உயிராகத் தமிழ் இனமே உணர்வாக தமிழர் நலனும் தமிழ் நாட்டின் வளர்ச்சியும் வாழ்நாள் செயல் திட்டமாக கொண்ட ஓய்வறியா சூரியனும்,தனது 94 ஆண்டு காலம் ஆயுள் காலத்தில் 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரரும், ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு கால பங்களிப்பாளரும், அரை நூற்றாண்டு காலம் காலகட்டத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும், களம் கண்ட 13 தேர்தலிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் , ஐந்து முறை தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும், நலன் விளை விக்கும் திட்டங்களை வழங்கியவரும், இந்திய ஜனநாயகத்தின் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் என கதொட்ட துறைகள், அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத் திறன் கொண்ட படைப்பாளரும் தான் ஆட்சி காலத்தில் முதலமைச்சராக அமர்ந்த போது எல்லாம் தமிழ்நாட்டு அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்வி, மருத்துவம்,வேளாண்மை, தொழில் வளர்ச்சி, பொருளாதாரம், நதிநீர் பிரச்சனை, பெண்ணிய கோட்பாடு,இட ஒதுக்கீடு,சமூக நீதி, தொழிலாளர் நலனை முன்னிறுத்திச் சட்டங்கள் வாரியங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வகுத்து விவசாயிகளின் பாதுகாவலராக இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த வருமான நம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா. 2023 ஜூன் 3 ஆம் தேதி தொடங்க உள்ளது..

விழா தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும், உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற,தி.மு.க உயர்நிலையில் திட்ட குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படி:

வடசென்னையில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்திலும், ஜூன் 20 ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத் திறப்பு விழாவிலும், 2023 ஜூன் 3 தொடங்கி, 2024 ஜூன் 3 வரை ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்திடவும்,

ஊர் தோறும் திமுக எனும் தலைப்பில் கிளை அளவில் இருக்கும் நமது பழைய கொடி கம்பங்களை புதுப்பித்து புதிய இரு வண்ணக் கொடிகளை ஏற்றிடவும் எங்கெங்கும் கலைஞர் என்ற அடிப்படையில்

கலைஞரின் உருவச் முழு சிலை மார்பளவு சிலைகளை அமைப்பதற்கான முயற்சிகளில் கழகத் தீர்மானக்குழு நிர்வாகிகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும்;

கழகமே குடும்பம் எனும் தலைப்பில் பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்வதில், கழகத் தீர்மானக் பங்கேற்றிடவும். குழு சிறிய அளவிலாவது

என்றென்றும் கலைஞர் எனும் தலைப்பில் கருத்தரங்கம் பொதுக்கூட்டம் போன்ற நிகழ்வுகளில் திமுக தீர்மானக் குழு நிர்வாகிகள் கலந்து கொண்டு தமிழ்நாடு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தின் பாரம்பரியமான ஜல்லிக்கட்டு விளையாட்டு உச்சநீதிமன்றம் வரை சென்று சட்டபூர்வமாக வெற்றி பெறக் கடுமையாக முயற்சி எடுத்த தமிழ் நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு நன்றியினையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது. புதுக்கோட்டையில் நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு திமுக சார்பில் எடுக்கும் பாராட்டு விழாவிற்கும், இக்கூட்டம் நன்றியை, வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

உடன்பிறப்புகளாய் இணைவோம் என்ற அடிப்படையில் தொகுதிக்கு 50 ஆயிரம் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் கழக நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படக் கழக தீர்மானக் குழுவின் நிர்வாகிகள் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கிறது.

சிங்கப்பூர் ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமைந்ததுடன் ரூபாய் 3,233 கோடிக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்திலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் அரசு முறை பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இந்தத் தீர்மானக் குழு தெரிவிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தியாகராய நகரில் கலைஞர் நூற்றாண்டு விழா!

சென்னை, ஜூன் 5 -

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 ‘அ’ வட்டத்தில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் தியாகராய நகர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதி கழக செயலாளர் கே .ஏழுமலை எம்.சி., கே.எஸ் .வெல்டிங் மணி, வட்டக் கழகச் செயலாளர் கே. எஸ்.வெல்டிங் ராஜா, மாமன்ற உறுப்பினர் திருமதி.பா.கார்த்திகா பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில், ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 100 வது பிறந்த நாள் விழாவை 132 வட்டத்துக்கு உட்பட்ட ஷேர்கான் தோட்டம், ரங்கராஜபுரம் 60 குடிசை பகுதி, சிஆர்பி கார்டன் முதல் தெரு தெரு தனக்கோடி அம்மாள் தெரு, சிஆர்பி கார்டன் 2வது, சிஆர்பி கார்டன் 3வது தெரு தெரு.,சிஆர்பி கார்டன் இரண்டாவது குறுக்கு தெரு சி ஆர் பி கார்டன் மெயின் ரோடு, வள்ளியம்மாள் தோட்டம் 3வது தெரு கார்ப்பரேஷன் காலனி மெயின் ரோடு அஜீஸ் நகர் முதல் தெரு, அஜீஸ் நகர் 2வது தெரு, அஜீஸ் நகர் மெயின் ரோடு, ரங்கராஜபுரம் மெயின் ரோடு, விஸ்வநாதபுரம் மெயின் ரோடு. ஸ்டேஷன் வியூ ரோடு, ரயில்வே பார்டர்ரோடு ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் அலங்கரித்து வைக்கப்பட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் வட்ட மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை மற்றும் மாவட்ட அலுவலகத்தின் முன்பு கலைஞர் அவர்களின் திரு உருவ படத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் நவாப், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், சித்ரா சந்திரசேகர், நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணகிரி நகர மன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.